**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.10/2022**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஏப்ரல் மாதம் 9 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : லட்சுமிகாந்த் | மதம் | : இந்து |
| த/பெ | : செங்கம்ம நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 61 | கிராமம் | : வேலூர் |
| தொழில் | : வியாபாரம் | வட்டம் | : வேலூர் |

**09.04.2026**

**வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

8. நான் அகூர் கிராமத்தில் திருமண மண்டபம் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். என் அப்பாவிற்கும் பிரதிவாதிகளுக்கும் 06.02.2002ல் பாகப்பிரிவினை பிரச்சனை ஏற்பட்டு 06.02.2002ல் என் அப்பா பாகப்பிரிவினை ஆவணம் எழுதி வைத்தார் என்றால் பகுதியாக எழுதி வைத்தார். அவர் பிரதிவாதிகளின் பாகத்திற்கு பாக ஆவணத்திற்கு பதிலாக செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் ஆமாம். 08.01.2006ல் 5 செண்ட் நிலத்தை எனக்கு எழுதி வைத்ததாக சொல்லும் ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி 08.01.2006ம் தேதியிட்ட ஆவணத்தில் கிராம நத்தம் வீடுதான் உள்ளது என்றாலும் நிலம் இல்லை என்றாலும் சரிதான்.

9. அந்த வீட்டை 2ம் பிரதிவாதி பாகம் கேட்டு தகராறு செய்தார் என்றால் இல்லை. நான் திருமண மண்டபம் கட்டியுள்ள இடத்திலும் 2ம் பிரதிவாதி பங்கு கேட்டு நான் மறுத்துவிட்டேன் என்றால் இல்லை. திருமண மண்படத்தில் என் சகோதரி எதுவும் கேட்கவில்லை. என் சகோதரி என்னிடம் பாகம் கேட்டதால்தான் அவருக்கு எதிராக நான் பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் சகோதரி காதல் திருமணம் செய்தார் என்றால் சரிதான். அதனால் அவருக்கு பங்கு கொடுக்க கூடாது என்று நான் என் அப்பாவை கட்டாயப்படுத்தியதால் என் அப்பா தாவா சொத்தை 2ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் 06.02.2002ல் பாகம் நடந்தபோதே வாதிகளுக்கு என் அப்பா சுவாதீனம் கொடுத்துவிட்டார். அதற்கு அருகில் உள்ள புல எண்.243/5ல் உள்ள என் சொத்திற்கு போவதற்கு 6 செண்ட் வழிப்பாதையும் வழக்கு சொத்தில் எனக்கு கொடுத்துள்ளார்.

10. எனது செட்டில்மெண்ட் ஆவணத்தில் தாவா சொத்தில் எனக்கு வழியிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்து பிரதிவாதிகளுக்கு மட்டுமே சொந்தமான சொத்து என்றாலும் 2ம் பிரதிவாதியிடம் வழி கேட்டு அவர் கொடுக்காததால் வாதியை வைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பிரமாண வாக்குமூலம் பத்தி 7ல் செட்டில்மெண்ட் மூலம் தாவா சொத்து வாதிகளுக்கு ஒதுக்கப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அவர்களுக்கு வாய்மொழியாகதான் கொடுக்கப்பட்டது. என் அப்பா பிரதிவாதிகளுக்கு கொடுத்த சொத்தில் எனது வழி பிரச்சனையை மனதில் வைத்து கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்ய வைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு வழக்கு சொத்து பாத்தியமே இல்லை என்றாலும் வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)